

ஸ்ரீ ஹரி :


பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 | ஜூலை 2000 | கானம் : 12



ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 5 ஜூலை 2000 கானம் : 12

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 56 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 38 | 8 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 26 | 10 |
| 6. | ஜ்யோதிஷம் - 5 | 20 |
| 7. | மஹாபாரத கதைகள் - பதிவ்ரதா மாஹாத்மிய பர்வம் - தொடர்ச்சி | 22 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 32 | 25 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 59 | 27 |
| 10. | செய்திகள் | 30 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : மலயமாருதம் தாளம் : ஆதி

## பல்லவி

ஸுந்தர ஸ்ரீநிவாஸம்
பஜாமி - ஸதா (ஸுந்தர)

## அனுபல்லவி

ஶேஷகிரிவாஸம்
அக்ஷயபலப்ரதம்
பக்ஷிவாஹனம்
ரக்ஷித ஜகத்த்ரயம் (ஸுந்தர)

## சரணம்

மந்தஹாஸதர வதனம்
மத்தமாதங்க கமனம்
மங்கள ஶங்க சக்ர தாரிணம்
முரளீதர ஹ்ருதய க்ருத பவனம் (ஸுந்தர)

## நாமாவளி

வேங்கடரமண கோவிந்த
ஶங்கடஹரண கோவிந்த
ஸ்ரீநிவாஸ கோவிந்த
ஸ்ரீவேங்கடேஶ கோவிந்த

## மதுரமான ஞானியர் 56

ப்ரேமைதான் பக்திக்கு அடிப்படையானதாக உள்ளது. ஒரு பெரிய தனவந்தனின் வீட்டில் தோட்டம் பராமரிக்க, சமையல் செய்ய, கார் ஓட்ட, இது போன்ற மற்ற அநேக வேலைகளையும் செய்ய எத்தனையோ வேலைக்காரர்கள் இருப்பார்கள். அந்த வேலைக்காரர்கள், ''நாம் செய்யும் வேலைக்கு முதலாளி கூலி கொடுக்கின்றார், நாம் நம்முடைய வேலையை, கடமை உணர்ச்சியுடன் ஒழுங்காக செய்யவேண்டும். அந்த வேலைக்கு இவர் கூலி கொடுக்கின்றார்'' என்ற எண்ணத்தில் வேலை செய்தால் அந்த முதலாளிக்கும் வேலை செய்பவர்களுக்கும் இடையே ஒரு பாசப் பிணைப்பு ஏற்படுவதில்லை.

அந்தந்த வேலைகளை செய்பவர் ஒழுங்காக செய்யாவிட்டால், அவரை நீக்கிவிட்டு வேறு ஒருவரை அந்த வேலையில் அமர்த்துவதற்கும் இந்த முதலாளி தயங்கமாட்டார். அது போல், இதைவிட வேறு ஒரு இடத்தில் அதிகமான ஊதியம் கிடைக்குமானால் வேலை செய்பவர்களும் இந்த முதலாளியை விட்டு வேறு ஒருவரிடம் வேலைக்கு போகவும் தயங்க மாட்டார்கள். இவர்களுக்கு இடையில் இருப்பது ஒரு கடமை உணர்வே.

ஆனால், அதே முதலாளியிடம், ஊழியம் செய்பவருக்கு ஒரு பாசப் பிணைப்பு ஏற்பட்டு, அவரிடம் அன்பு ஏற்படுமானால், அந்த முதலாளிக்கும் ஊழியம் செய்பவரின் மேல் அன்பு ஏற்படுகின்றது. அவர்மேல் உள்ள அன்பினால் அந்த முதலாளியை விட்டு வேறு ஒருவரிடம் வேலைக்கு போகவும் அவன் சிந்திப்பதில்லை. அந்த முதலாளியும் தன்னை விட்டு அவன் பிரிவதையும் விரும்புவதில்லை. அவனுடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியம் என்பது மாறி அவனுடைய தேவைகளுக்கும், அவனுடைய ஸந்தோஷத்திற்கும் ஏற்ற ஊதியம் என்றாகி விடுகின்றது.

அது போலவே, த்யானம், தபஸ், ஜபம், யோகம் வேத அத்யயனம் இவை அனைத்தையும் இறைவனிடம் பிரேமை இல்லாமல் செய்தால், நாம் எந்த அளவிற்கு செய்தோமோ அந்த அளவிற்குதான் அருள்

பாலிக்கின்றான். பகவானுக்கு அவனுடைய விஷயத்தில் கடமை உணர்வுதான் ஏற்படுகின்றது. தன்னிடம் ஸுத்த பிரேமையுடன் பக்தி செய்கின்றவனிடத்திலேயே, பகவானுக்கு இவன் நம்மை சேர்ந்தவன் என்று நினைத்து அவனுடைய இகபர லாபங்களை ஏற்கின்றான்.

ஆகவே, பகவானிடம் பிரேமையில்லாமல், அவனுடைய இருப்பையே ஸந்தேகித்துக்கொண்டு, அவனை நிந்தை செய்து கொண்டே செய்யும் எந்த ஸாதனையும் அவரிடம் உண்மையான பக்தியை வளர்ப்பதில்லை. அத்தகைய உண்மையான பக்தி, பாகவதத்தில் சொல்லியுள்ளபடி ''வினா மஹத் பாத ரஜோபிஷேகம்'' என்றபடி மஹான்களின் அனுக்ரஹம் இல்லாமல் சித்திக்காது. ஸ்ரீ ஸ்வாமிகள், ஸமீபத்தில் சொன்ன மேற்படி விசேஷங்கள் ரஸமானதாக இருந்ததால் எழுதுகின்றேன்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

- ஒரு ஸாதகன் மிக்க விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் கவனத்துடன் இருக்கவேண்டும். தன் மனம், அறியாமை வழியில் செல்லாது தடுக்கவும், அதை அறிவுப் பாதையில் செலுத்தவும் ஸாதகன் அதை அதிஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டே இருக்க வேண்டும். தியானத்தினாலும், ஶரணாகதியாலும் சாட்சி **பா**வ நிலையை வளர்க்கவேண்டும். தன்னுள் உள்ள அழிவற்றதும் ப்ரகாசமானதுமான ஸத்தியத்தின் உணர்வுதான் அந்நிலை. உண்மையில் இவ்வுணர்வே கூட ஒரு கடவுள் அனுபவமாகும்.

- பல்வேறு விதமான ஒளிகளின் காட்சிகளையும், உருவத் தோற்றங்களையும் கண்டு அவைகளைக் கடந்த பிறகுதான் பரிபூரணமான உண்மையை உணரலாம். இக்காட்சிகள் எல்லாம் ஆத்மீகப் பாதையில் நிச்சயமாக முன்னேற்றத்தைக் குறிக்கும் மைல் கற்களே. ஆனாலும் அவைகளிலேயே ஒட்டிக் கொண்டிருந்து விடாதே.

- பப்பா ராமதாஸ்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

***கேள்வி : பகவத்கீதைக்கு நான் ஒரு commentary எழுதலாம் என்று நினைக்கின்றேன். தங்களுடைய அபிப்ராயம் என்ன?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : பகவத்கீதை, பாகவதம், ராமாயணம், வேதம் மற்றும் மஹான்களுடைய க்ரந்தங்களுக்கு அநுபூதிமான்களான மஹாத்மாக்கள் தான் பாஷ்யம் எழுதவேண்டுமே தவிர, புத்தி ஸாமர்த்தியத்தினாலோ, வித்வத் ஸாமர்த்தியத்தினாலோ இவைகளுக்கு பாஷ்யம் பண்ணக்கூடாது.

***கேள்வி : ஏன்?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒரு மரம் இருக்கின்றது என்றால் அது நிழல் தருகின்றது; புஷ்பம் புஷ்பிக்கின்றது; காய்கள் தருகின்றது; பழங்கள் பழுக்கின்றது; இதுவே, மரத்தின் பரம ப்ரயோஜனம், அதனுடைய வேரை நாம் ஆராய்ச்சி செய்தால் மரத்திற்கே ஆபத்து ஏற்படும். அதுபோல், மஹான்களுடைய க்ரந்தங்களில் சில பாகங்களை மேலோட்டமாகப் படிக்கும்பொழுது அரஸமாகவும், விபரீதமாகவும், லோகதர்மத்திற்கு விரோதமாகவும் தோன்றும். ஆகவே, உங்களுடைய குதர்க்க புத்தியை வைத்துப் பார்த்தால் நீங்கள் குழம்பித்தான் போவீர்கள். அநுபூதி அடைந்த பின் அவைகளை படித்துப் பார்த்தால் அதன் ரஹஸ்ய அர்த்தங்கள் புரியவரும்.

***கேள்வி : ஜபமாலை வைத்துக்கொண்டுதான் ஜபம் செய்ய வேண்டுமா?***

பதில் : அப்படி ஒன்றும் அவசியமில்லை. ஆனால், ஜபமாலை தங்கள் கைகளில் இருந்தால் தாங்கள் ஜபம் செய்கின்றீர்கள் என்பதை அறிந்து மற்றவர்கள் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் கொடுக்கமாட்டார்கள். இதுவும் ஒரு ப்ரயோஜனம் தான்.

## *கேள்வி : எவ்வளவு ஸாதனை செய்தும் எனக்கு ஆன்மீகத்தில் ஒரு முன்னேற்றம் ஏற்படமாட்டேன் என்கின்றதே!*

ஸ்ரீ ஸ்வாமிகள் : நீங்கள் பல ஆன்மீகப் புத்தகங்களைப் படித்ததாலும் பல ஆன்மீக சொற்பொழிவுகளைக் கேட்டதாலும் உங்களுக்கு பகவானை அடையவேண்டுமென்னும் ஆசை ஸமீபத்தில் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், உள்ளுக்குள் உலக ஆசைகளை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசைகள் உங்களில் இருக்கும். ஆகவே, இந்த இரண்டு எண்ண அலைகளுக்கும் முரண்பாடு உள்ளது. ஒரு குழப்பம் அல்லது கொந்தளிப்பு ஏற்படலாம்.

உங்களுடைய எண்ணங்கள் முழுவதும் ஒரே லக்ஷியமும், அதை நோக்கி தீவிரமான வேட்கையும், சோம்பேறித்தனமில்லாத ஸாதனையும் தான் தங்களுடைய லக்ஷியத்தை நிறைவேற்றித் தரும்.

நான் சொல்வதைத் தாங்கள் மறுக்கலாம். ஆனால் உங்களுக்கு வாழ்க்கையில் துன்பம் ஏற்படும்பொழுதும், தங்களுடைய ஆசைகள் நிராசையாகப் போகும்பொழுதும், தங்களுக்கு ஏற்படும் துக்கமே இதற்கு போதிய சான்றாகும். ஆன்மீக தாபம் உள்ளவனுக்கு உலகப் பொருள்களின் லாபமோ, நஷ்டமோ ஒரு பொருட்டாகவே இருக்கக் கூடாது.

## *கேள்வி : என்னால் பாகவதம், ராமாயணம் போன்றவைகளைப் படிக்க முடிவதில்லை. வயதும் ஆகிவிட்டது. நான் என்ன செய்வது?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : பாகவதம், ராமாயணம் போன்றவைகள் பகவானே உலகத்தில் அவதாரம் செய்தபொழுது அவனுடன் ஸம்பந்தப்பட்டவர்களின் அனுபவங்களும், பகவானுடைய குணங்களும், ப்ரபாவங்களும் அடங்கியதே ஆகும். தாங்களும், தங்கள் வாழ்க்கையில் எந்த ஒரு மஹாத்மாவுடனோ, அவதார புருஷர்களுடனோ ஸம்பந்தம் பெற்றிருந்தால் அவருடன் பேசியது, பழகியது போன்றவைகளை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். நேரிடையான அனுபவங்களாக இருப்பதால் அதுவே தங்களுக்கு பரம சுகமாக இருக்கும். இதுவே, உங்களைப் பொறுத்தவரை பாகவதம், ராமாயணம் ஆகும்.

*கேள்வி : மஹான்கள், தங்களைப் பார்க்க சில பெரிய மனிதர்கள் வந்தால் அவர்களுக்கு ஒரு தனி* importance *கொடுத்து கவனிக்கின்றார்களே! இது சரியா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : இப்பொழுதுதான் ஒரு மஹாத்மா தன்னிடம் வந்த ஒரு பெரிய மனிதரை விசேஷமாக கவனித்து அனுப்பினார். இவருடைய சீடர் ஒருவர் தாங்கள் கேட்டது போன்ற கேள்வியையே தன்னுடைய குருநாதரிடம் கேட்டார். அதற்கு அந்த குருவோ, ''என்னிடம் பணம் வேண்டுவோர்க்கு பணத்தையும், ஆரோக்யம் வேண்டுவோர்க்கு ஆரோக்யத்தையும், மோக்ஷம் வேண்டுவோர்க்கு மோக்ஷத்தையும் கொடுக்கின்றேன். யார் யார் என்னிடம் எதை எதை உத்தேஸித்து வருகின்றார்களோ அதை அதை அவர்களுக்கு அனுக்ரஹிக்கின்றேன். அந்த பெரிய மனிதர் என்னிடம் வரும்பொழுது அவருக்குரிய மரியாதையை நான் தரவேண்டுமென்று விரும்பினார். ஆகவே, அதன்படி அவருக்குகந்த மரியாதையைக் கொடுத்து உபசரித்தேன்'' என்றார்.

*கேள்வி : ஆன்மீகம் என்பதும் வெறும் ஸமாதானம் தானா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : அநுபூதியில் அனைத்தும் புரிகின்றவரை நமக்கு எல்லாம் ஸமாதானமாகவே தோன்றும். அநுபூதி அடைந்தால் தவிர குழப்பங்களும், ஸந்தேகங்களும் தீரவே தீராது, அல்லது மஹான்களுடைய வார்த்தையில் திடமான விஶ்வாசம் வேண்டும். எந்த விஷயத்திலும் self centred ஆக இருக்கின்றவர்களுக்கு ஒன்றும் விளங்காது.

---

- இவ்வுலகத்தில் எல்லோரையும் திருப்திப்படுத்தமுடியாது. மனதை உள்ளே அடக்கி நீ உன் ஆத்மாவில் லயித்திருக்கும் பொழுது உன்னைப் பற்றிப் பிறர் என்ன கூறினாலும் நீ பாதிக்கப்பட மாட்டாய். உன்னுள் உள்ள ஆத்மாவுக்கு நேர்மையாக நடந்து கொள்.

- பப்பா ராமதாஸ்

# வேத கதைகள் - 38

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## அத்புதரின் சரித்ரம்

முன்பு ஒரு ஸமயம், தேவர்கள் ஸர்வச்ரு என்ற பெயருள்ள உயர்ந்த இடத்தில் ஒரு ஸத்ர யாகத்தை அனுஷ்டித்தனர். பொதுவாக யஜமான தம்பதிகளைத் தவிர 16 ரித்விக்குகள் ஒரு யாகத்திற்கு தேவைப்படுகின்றனர். இவ்விதம் 18 நபர்களை கொண்டு யஜமான தம்பதிகளுடன் யாகம் செய்யப்படுகிறது. இதில் 16 ரித்விக்குகள் இல்லாமல் யஜமான தம்பதிகளுக்கு மட்டும் பயன் கிடைத்தால் அது யாகம் எனப்படும். 18 பேர்களுக்கும் பயன் கிடைத்தால் அது ''ஸத்ரம்'' எனப்படும். இந்த ஸத்ரத்தை தேவர்கள் செய்தனர். இதனாலும் அவர்களின் பாபம் அகலவில்லை.

மனிதன் ஏழ்மை அடைவதற்கு பாபம் தான் காரணம். ஸத்ரயாகம் செய்தாலும் பாபம் விலகாத தேவர்களை ''அத்புதர்'' என்ற பெயருள்ள ரிஷியானவர் தேவர்கள் இருக்குமிடம் வந்து கூறினார். அவர் ''கத்ரூ'' என்ற பெயருள்ள பெண்ணின் பிள்ளை. அதனால் ''காத்ரவேயர்'' என்று அழைக்கப்படுகிறார். பாம்பு உருவம் தாங்கியவர். கண்களுக்கு புலப்படாத விஷயத்தை பார்ப்பவர். மந்திரங்களை கண்டுபிடித்தவர்.

ஓ தேவர்களே ! ஹோத்ருவேதமான ரிக்வேதத்தில் கூறப்பட்ட ஒரு கர்மாவானது உங்களால் செய்யப்படவில்லை. அந்த கர்மா செய்யப்படாததால் தான் உங்கள் பாபம் விலகவில்லை. அந்த கர்மாவை உங்களுக்காக நான் செய்கிறேன். உங்கள் பாபம் விலகும் என்று கூறினார். இதை தேவர்கள் அங்கீகரித்தனர். பிறகு அத்புதர் அந்த தேவர்களுடைய ஸத்ர யாகத்தில் மாத்யந்தின ஸவனத்தில் மட்டும் உத்ஸாஹம் உள்ளவராக ஈடுபட்டார்.

வந்து யாகத்தில் ஸோமலதையை நசுக்குவதற்காக உள்ள பாறாங்கற்களை துதித்தார். இந்த கர்மா இப்பொழுதும் யாகத்தில் செய்யப்பட்டு வருகிறது. இந்த கற்களை துதி செய்யும் நபருக்கு

க்ராவஸ்துத் என்று பெயர். அந்த பாம்பு உருவமுள்ள அத்புதர் என்ற மஹரிஷி எந்த வழியாக வெளிவந்தாரோ (எந்த புற்றிலிருந்து வெளிவந்தாரோ) அந்த வழியானது இப்பொழுதும் அத்புதபுற்று என்று வழங்கப்படுகிறது. கற்களை துதிப்பதற்காக அத்புதர் என்ற மஹரிஷியானவர் பாம்பு உருவத்துடன் வெளிவந்தபோது அவரது விஷத்ருஷ்டியால் ஸோமலதையும் (ஸோமராஜா) விஷம் கலந்ததாக ஆகி பக்கத்தில் உள்ள தேவர்களையும் விஷஜ்வாலையால் மயங்கியவைகளாக செய்தது. அப்பொழுது தேவர்கள் பரஸ்பரம் பேசிக்கொண்டனர். பாம்புருவமுள்ள இந்த அத்புதர் நம்முடைய ஸோமராஜாவை விஷம் நிரம்பிய பார்வையால் பார்க்கிறார்.

அதைப் போக்கடிப்பதற்காக முண்டாசு போன்ற தலையில் சுற்றுவதற்கு ஸாதனமான சிறிய வஸ்த்ரத்தால் அவர் கண்ணை கட்டுவோம் என்று தீர்மானித்து ஒரு வஸ்த்ரத்தால் 3 சுற்றாக கட்டி அவர் கண்ணை மறைத்தனர். தேவர்களால் இவ்வாறு செய்யப்பட்டதால் இப்பொழுதும் கராவஸ்துத் என்பவருடைய ரித்விக்களுடைய முகத்தை ஒரு புது வஸ்த்ரத்தில் கட்டி துதிக்கின்றார். இந்த க்ராவஸ்துத் என்ற நபரும் அத்புதர் என்ற முனிவராகவே ஆகிறார். இவ்விதம் செய்து அந்த ஸோமராஜாவானவர் தேவர்களை மயங்கச் செய்தார்.

பாம்பின் விஷப்பார்வை விலகுவதற்காக கண்ணை கட்டி இந்த ரிஷியானவர் தன்னைச் சார்ந்த மந்த்ரத்தால் துதிக்கிறார். தேவர்கள் இவ்விதம் பாம்புகளை சார்ந்த மந்த்ரத்தால் நமக்கு மயக்கம் ஏற்படுகிறது. மந்த்ரத்தில் உள்ள விஷத்தை போக்குவதற்காக என்ன செய்யலாம் என்று ஆலோசித்து ''ஆப்யாயஸ் சதுபேதுதே'' என்ற மந்த்ரத்தை அந்த மந்த்ரங்களுடன் செய்தனர். இந்த மந்த்ரத்தின் பெருமையால் விஷ மந்த்ரங்கள் ஶாந்தமாக ஆயிற்று. அதனால் யாருக்கும் மயக்கம் ஏற்படவில்லை.

இவ்விதம் அத்புதரால் செய்யப்பட்ட உயர்ந்த கர்மாவினால் தேவர்கள் பாபம் விலகி பணக்காரர்களாக ஆகினர். இவ்விதம் தேவர்கள் பாபம் விலகியதால் அற்பதரைச் சேர்ந்த எல்லா பாம்புகளுக்கும் பாபம் நீங்கியது. எந்த பாம்புகள் தன் பழைய தோலை உரித்து புதியதாக ஆகின்றதோ அந்த பாம்புகள் பாபம் அற்றதாக ஆகின்றன. இந்த வரலாறை அறிந்த யாருக்கும் பாம்புகளினால் விஷம் அவர்களை பாதிக்காது.

# எந்தரோ மஹானுபாவுலு - 26

நிமாயியின் எல்லா லீலைகளுமே திவ்யமானவைகள்தான். மற்ற குழந்தைகளைப்போல் அவன் ஸஞ்சலமான விளையாட்டுகளை விளையாடினாலும் அதில் ஒரு அலௌகிகமான **பா**வம் கட்டாயம் புலப்படும். ஒரு நாள், நிமாயியின் தந்தை கங்காஸ்னானம் செய்துவிட்டு வீடு திரும்பும்பொழுது வீட்டின் அருகில் ஒரு ப்ராஹ்மணரைக் கண்டார். அவரது தேஜோமயமான ரூபத்தைக் கண்டதும் மிச்ராஜி அவரை வணங்கி தனது வீட்டுக்கு பிக்ஷைக்கு அழைத்தார். ப்ராஹ்மணரும் மிச்ராவின் அழைப்புக்கு இணங்கி அவர் வீட்டில் உணவருந்த ஸம்மதித்தார்.

வீட்டிற்குள் வந்த ப்ராஹ்மணருக்கு பாதத்தை அலம்பிவிட்டு குடும்பத்துடன் மிச்ராஜி அவருக்கு நமஸ்காரம் செய்தார். பிறகு அவருக்கு தனியாக அடுப்பு, மளிகை ஸாமான்கள் தந்து உணவு ஸமைத்துக் கொள்ள வசதிகள் செய்து தந்தனர். ப்ராஹ்மணரும் தனக்கு வேண்டிய உணவை தயாரித்துக்கொண்டு ஒரு இலையில் உணவை வைத்து அனைத்து பதார்த்தங்கள் மீதும் துளசிதளத்தைப் போட்டு ஆசமனம் செய்து பகவானை த்யானம் செய்து கண்ணை மூடிக்கொண்டு விஷ்ணுவிற்கு உணவை அர்ப்பணம் செய்தார்.

இதற்குள் நிமாயி மெல்ல தவழ்ந்து அங்கு வந்து, இலையிலிருந்த உணவை எடுத்து சாப்பிட ஆரம்பித்துவிட்டார். ப்ராஹ்மணர் கண்ணைத் திறந்து பார்த்தால் நிமாயி உணவை சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். உடனே, அவர் ''அடடா என்ன இது! இப்படி ஆகிவிட்டதே'' என்றார். இதைக் கேட்டதும் நிமாயி பயந்தாற்போல் அங்கிருந்து ஓட ஆரம்பித்தார். மிச்ராவும் அவர் பின்னே அவரை அடிக்க ஓடினார். நிமாயி, அன்னையில் பின் சென்று ஒளிந்துகொண்டார்.

இதற்குள் அந்த ப்ராஹ்மணரே மிச்ராவிடம் ஓடிவந்து, ''குழந்தைக்கு என்ன தெரியும். நீங்களே பண்டிதர். இப்படி கோபிக்கலாமா? உணவில்லாவிட்டால் என்ன? சிறிது கடலையை சாப்பிட்டுவிட்டு தீர்த்தம் குடித்தால் போதும்'' என்றார். ஆனால், மிச்ரா தம்பதிகளுக்கு மனம் இடம் தரவில்லை. ப்ராஹ்மணருக்கு மறுபடி உணவு தயாரித்துக்கொள்ள பொருள்களை தந்து அவரை சமைத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டனர். அவர்களது அன்பினால் மனமிளகி ப்ராஹ்மணரும் மறுபடி

ஸ்னானம் செய்துவிட்டு உணவு சமைத்துக்கொண்டு அதை பகவானுக்கு அர்ப்பணம் செய்யும்பொழுது மறுபடி நிமாயி எங்கிருந்தோ ஓடிவந்து இருகைகளாலும் அன்னத்தை வாரி வாரி எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தார். பருப்பை தன் உடலில் எடுத்து பூசிக் கொண்டார். இதற்குள் சசீமாதா உள்ளேயிருந்து ஓடிவந்து நிமாயியைப் பார்த்து பதறினாள்.

மிச்ராவுக்கு கோபம் கரை புரண்டது. அவரை அடிக்க கையை ஓங்கினதும், ப்ராஹ்மணர் ஓடிவந்து அந்தக் கையைப் பிடித்து, ''என் மீது சத்தியம். குழந்தையை அடிக்காதீர்கள்'' என்று கூறினார். மேலும், ''ஒன்றும் அறியாக் குழந்தையை கடிந்து என்ன பயன். இன்று எனக்கு போஜனம் இல்லை என்பதுதான் விதி போலும்'' என்றும் கூறினார். நிமாயி, அம்மாவின் பின்னால் பயந்து ஒளிந்துகொண்டு தந்தையை அடிக்கடி பயத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். அன்னைக்கு தனது பயந்த குழந்தை மீது அபாரமான தயை ஏற்பட்டு, தனது இடுப்பில் தூக்கிக் கொண்டாள்.

இதற்குள் பாடசாலையிலிருந்து மூத்த மகன் விச்வரூபன் திரும்பி வந்தான். அதிதியாக வந்த ப்ராஹ்மணருக்கு நமஸ்காரம் செய்தான். மௌனமாக ஒரு பக்கம் போய் நின்றுகொண்டான். அழகான தேஜஸுடன் கூடிய விச்வரூபனைக் கண்டு அதிதி ப்ராஹ்மணர், ''இந்த தேவகுமாரனைப் போன்ற பாலகன் யாருடைய மகன்?'' என்று கேட்டார். மிச்ராவும் லஜ்ஜையுடன், ''எங்களது மகன்தான் இவன்'' என்று வினயமாகச் சொன்னார். ப்ராஹ்மணர் வைத்த கண் வாங்காமல் விச்வரூபனையே பார்த்துக்கொண்டு இருந்தார். இதற்குள் விச்வரூபனுக்கு நடந்த விஷயங்கள் ஓரளவு புரிந்துவிட்டது. உடனே அவன் ப்ராஹ்மணரிடம் சென்று, ''மஹராஜ்! தயவுசெய்து எனக்காக நீங்கள் இன்னும் ஒரு முறை உணவு தயாரித்துக்கொள்ள வேண்டும். இந்தத் தடவை உங்களுக்கு எந்தவிதமான தடையும் இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்'' என வேண்டிக் கொண்டார்.

உடனே ப்ராஹ்மணரும் விச்வரூபனைப் பார்த்து, ''எனக்காக வருந்தாதே அப்பா. நான் எப்பொழுதும் திரிந்து கொண்டிருப்பவன். தினம் தினம் உணவு தயாரித்துக்கொள்ளும் ஸந்தர்ப்பம் எனக்கு எங்கே கிடைக்கும். மாதக்கணக்கில் காய், கனி, கிழங்குகளை உண்டே காலத்தைக் கழித்து வருவேன். சில ஸமயம் உபவாசமும் இருப்பேன். எனக்கு இதெல்லாம் பழக்கம்தான். எனக்கு ஏதாவது இனிப்போ, வேர்க்கடலையோ தந்தாலும் போதும். உணவை நாளை பார்த்துக் கொள்ளலாம்'' என்றார்.

விச்வரூபன், ''மஹராஜ்! உங்களது ஸ்வபாவம் எங்களுக்குத் தெரியாதா? ஆனாலும் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்து உணவருந்தாமல் இருந்தால் எங்கள் தந்தைக்கும் தாய்க்கும் மிகவும் வருத்தமேற்படும். இவர்களுக்கு மறுபடியும் உங்களிடம் ப்ரார்த்தனை செய்துகொள்ளத் துணிவு இல்லை. எனவே, நான் உங்களிடம் வேண்டிக்கொள்கிறேன்'' என்றான்.

விச்வரூபனின் குரலில் இருந்த ப்ரேமையும் வினயமும் ப்ராஹ்மணரது மனத்தை உருக்கவே, அவர் மறுபடி குளித்துவிட்டு சமைத்துக்கொள்ள ஆரம்பித்தார். இந்தமுறை அன்னை நிமாயியை கயிற்றால் கட்டிப்போட்டு வைத்தாள். ப்ராஹ்மணருக்கு போஜனம் தயார் செய்து கொள்வதற்குள் இரவாகி விட்டது. அனைவரும் உறங்கிவிட்டனர். உணவை அவர் பகவானுக்கு அர்ப்பணம் செய்தபொழுது ஸாக்ஷாத் சதுர்புஜ கோபாலனே அவர் முன் வந்து நின்றுகொண்டார். ப்ராஹ்மணர் பார்த்துக்கொண்டு இருக்கும்பொழுதே நான்கு புஜங்களும் எட்டு புஜங்களாக மாறின. நான்கு புஜங்கள் ஸங்கம், சக்கரம், கதை, பத்மம் இருந்தன. ஒரு கையில் வெண்ணையிருந்தது. இன்னொரு கையால் உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். மற்றும் இரண்டு கைகளால் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தார். சிரித்துக்கொண்டே பகவான், ''நீ என்னை கூப்பிட்டாய். நானும் பாலகன் ரூபத்தில் உன்னிடம் வந்தேன். நீதான் என்னைப் புரிந்துகொள்ளவே இல்லை. நான் உன்னிடம் ப்ரஸன்னமானேன். வேண்டிய வரத்தைக் கேள்'' என்றார்.

கத்கதமான குரலில் ப்ராஹ்மணர், ''ஹே புருஷோத்தமா! உன்னுடைய மாயை அனந்தமானது. நான் எப்படி அதைப் புரிந்து கொள்ளமுடியும்? என்னைப் போன்ற அஜ்ஞானிக்கு நீ இப்படி க்ருபை செய்துள்ளாயே! நான் உன் பரஸன்னதைக்கு ஜபமோ, தானமோ, தர்மமோ, பூஜையோ ஏதுமே செய்யவில்லையே! என் மனதில் உங்களது மஞ்ஜுளமான மூர்த்தி எப்போதும் தெரியுமாறு வரம் அருளவேண்டும்'' என்றார். ''அப்படியே ஆகட்டும்'' எனக் கூறிய பகவான் மறைந்தார். ப்ராஹ்மணரும் உல்லாஸமாக உணவருந்தினார்.

இதற்குள் சசீமாதா விழித்துக்கொண்டாள். நிமாயி அருகில் தூங்கிக் கொண்டிருந்தான். ப்ராஹ்மணரும் உணவருந்தியதைக் கண்டாள். அடுத்த நாள் காலையில் ப்ராஹ்மணர் நிமாயிக்கு மனதுக்குள் நமஸ்காரம் செய்துவிட்டு கிளம்பிச் சென்றார். அந்த ஊரில் இருந்தவரை அவர் தினமும் வந்து நிமாயியை தர்சனம் செய்துவிட்டுதான் செல்வார்.

மிச்ரா தம்பதிகளுக்கு நிமாயி இத்தனை துடுக்குத்தனம் செய்தபொழுதும் அவர் மீது ப்ரேமை வளர்ந்து கொண்டேயிருந்தது. மேலும் அவரது குறும்புகளால் அன்னை, தந்தைக்கு அபூர்வமான ஆனந்தமும் உண்டாயிற்று.

உலகிலேயே மிகவும் இனிமையானதும் ஆனந்தம் தருவதும் எதுவென்றால், தனது குழந்தையின் மழலைக் குரல்தான். வேத ஶாஸ்த்ரங்களும் காதில் இனிமையாக எதிரொலிக்கக் கூடியது புத்ரனின் வாணிதான் என்று உறுதியாகச் சொல்கின்றன. சசீமாதாவுக்கும் ஜகன்னாத மிஸ்ராவுக்கும் முதுமைக்காலத்தில் கடைக்குட்டியாகவும், படு சுட்டியாகவும் பிறந்து, கொள்ளை குறும்பும், இனிய மழலைச் சொற்களும், மயக்கும் அழகும் நிறைந்த நிமாயியைப் பார்த்து பார்த்து அலுப்பே தட்டவில்லை மிச்ராவுக்கு. எப்பொழுதாவது நிமாயியை கடிந்துகொள்வார். ஆனால் அன்னைக்கு மனது தாளாது. எப்பொழுதும் செல்லம்தான். நிமாயி தனது ஜ்யேஷ்டரான விச்வரூபனிடம் மட்டும் மரியாதையுடன் பழகுவான். அண்ணனின் முன்பு ஏதும் குறும்பு செய்ய மாட்டான்.

தினமும் நிமாயி தந்தையுடன் கங்கைக்கு ஸ்னானம் செய்ய கிளம்புவான். சில ஸமயம், தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு செல்வான். சிலசமயம் அண்ணனின் வஸ்த்ரத்தைப் பிடித்துக்கொண்டு செல்வான். எப்பொழுதும் தந்தையிடம் ஏதாவது கேள்விகள் கேட்டுத் துளைத்துக்கொண்டே செல்வான். தந்தையும் பொறுமையாக பதில் சொல்வார். சில ஸமயங்களில் மௌனமாக இருந்துவிடுவார். இருவரையும் விட்டுவிட்டு தனியாக ஓடினால் விச்வரூபன், நிமாயியை இழுத்துத் தோளில் தூக்கிக்கொள்வான்.

கங்கைக் கரையில் விச்வரூபன் ஸந்த்யாவந்தனம் செய்யும் பொழுது நிமாயியும் எதிரில் உட்கார்ந்துகொண்டு அதே மாதிரி செய்ய ஆரம்பிப்பான் விச்வரூபன் அர்க்யம் விடும்பொழுது இவனும் அர்க்யம் விடுவான். விச்வரூபன் ஆசமனம் செய்தால் நிமாயியும் ஆசமனம் செய்வான். வீட்டிற்கு வந்து தந்தையிடம் விஸ்வரூபன், நிமாயி செய்வதை எல்லாம் சொன்னான். அவர்கள், ''நிமாயி! நீ எப்படி ஸந்த்யா வந்தனம் செய்தாய்'' என்று கேட்டால், அப்படியே அபிநயம் பிடித்துக் காட்டுவான். மூக்கைப் பிடித்துக்கொண்டு ப்ராணாயாமம் செய்து காட்டுவான். எல்லோரும் கலகலவென்று சிரித்து நிமாயியை கொஞ்ச ஆரம்பித்து விடுவார்கள். இப்படி நிமாயி, தான் பார்த்த நிகழ்ச்சியை எல்லாம் அழகாக அபிநயம் செய்து காட்டி அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்துவான்.

கங்கைக்கு போய் பழகின பிறகு தினம் மணிக்கணக்கில் கங்கையில் விளையாடுவான். இரண்டு தரம், மூன்று தரம் ஸ்நாநம் செய்வான். ஈர மண்ணினால் லட்டுகள் செய்து, உடன் விளையாடும் குழந்தைகள் மேல் ஓங்கி அடித்து விளையாடுவான். கங்கையில் ஓடும் இலைகள், பூக்கள் ஆகியவற்றை எடுத்து மணலில் தோட்டம் அமைத்துக் காட்டுவான். மிச்ராஜி, மகனிடம் ''குழந்தாய், இப்படி எந்நேரமும் விளையாட்டிலேயே கழிக்கலாமா? பாடமும் படிக்கவேண்டாமா?'' என்று கடிந்துகொள்வார். ஆனால் நிமாயி அதை கவனத்தில் வைத்துக் கொள்ளவே மாட்டான்.

ஒருநாள் மிச்ராவுக்கு மிகவும் கோபம் அதிகமாகி நிமாயியை அடிக்க கங்கைக்கு வேகமாகச் சென்றார். சசீமாதாவுக்கும் மிச்ராவின் கோபத்தைக் கண்டு பயமாகி விடவே பின்னாலேயே ஓடினாள். கங்கையில் நிமாயி தன் சகாக்களுடன் லூட்டி அடித்துக் கொண்டிருந்தான். கோபமாக வரும் மிச்ராவைக் கண்டதும் நிமாயியின் தோழர்கள் அவனை விட்டு விலகிச் சென்றுவிட்டனர். நிமாயியும் தந்தை கோபத்துடன் வருவதைக் கண்டு மிகவும் ஸாமர்த்தியமாக வேகமாக ஓட ஆரம்பித்தான். வழியில் அன்னையைக் கண்டதும் நேரே ஓடிச் சென்று அவளை அணைத்துகொண்டு நின்றான். அன்னை அவனை இடுப்பில் தூக்கிக்கொண்டதும், அன்னையில் புடவைத் தலைப்பில் முகத்தை மறைத்துக்கொண்டு பெருமூச்சு விட ஆரம்பித்தான்.

அன்னை ''நீ ரொம்பவும் உபத்திரவம் செய்கிறாய் நிமாயி? உன் அப்பா இப்பொழுது உன்னை அடித்து வெளுக்கப்போகிறார். என்ன செய்வது என்றே தெரியவில்லை'' என்று கவலையுடன் சொன்னாள். இதற்குள் மிச்ராஜியும் அங்கு வந்து சசீமாதாவிடமிருந்து நிமாயியை பிடித்து இழுக்கலானார். அதற்குள் பத்து, பதினைந்து பெரியவர்கள் அங்கு வந்துவிட்டனர்.

எல்லோரும் மிச்ராவிடம், ''போகட்டும், நிமாயி குழந்தைதானே. இன்னும் விவரம் புரியவில்லை. அவனை அடிக்காதீர்கள். கொஞ்ச காலம் சென்றால் சரியாகி விடுவான். பெரிய பண்டிதரான நீங்கள் பொறுமையை இழக்கலாமா?'' என்று ஸமாதானம் செய்தனர். மிச்ராஜிக்கும் தனது செயல் மீது வெட்கம் ஏற்பட்டது.

சில தினங்கள் சென்றதும் ஒரு நாள் இரவு மிச்ராவுக்கு ஒரு கனவு நேர்ந்தது. அதில் ஒரு மஹாபுருஷர் தோன்றி அவரிடம் ''மிச்ராஜி, உங்கள் மகன் ஸாதாரணமானவன் இல்லை. நிமாயி அலௌகிகமான மஹாபுருஷர். நீங்கள் அவரிடம் கடிந்துகொண்டு பழகுவது சரியில்லை''

என்று சொன்னார். ஸ்வப்னத்திலேயே மிச்ராவும், ''நிமாயி வேணுமானால் பெரிய மஹாபுருஷனாக இருக்கலாம். எப்பொழுது என்னுடைய புத்திர ரூபத்தில் ப்ரகடனமாகி இருக்கிறானோ, அப்பொழுது அவனை கண்டிக்கவேண்டியது பிதாவான எனது தர்மம் தானே! எனவே அவனுக்கு சிக்ஷை அளிக்கும் நிமித்தமாகத்தான் அவனைக் கண்டிக்கிறேன்'' என்றார்.

அந்த திவ்யபுருஷரும், ''நிமாயி ஸ்வயம் எல்லாவற்றையும் கற்றுணர்ந்தவன். இவனுக்கு ஶாஸ்த்ரங்கள் கற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் ஏன் வீணாக அவனை சிரமப்படுத்துகிறீர்கள்'' என்று சொன்னாராம். உடனே மிச்ராஜியும், ''பிதாவின் தர்மம் புத்திரனை ரக்ஷித்து வளர்க்கவேண்டும். புத்திரன் எத்தனை குணவானாகவும், ஶாஸ்த்ரக்ஞனாகவும் இருந்தாலும் நான் எனது தர்மத்தை அவசியம் பாவனம் செய்வேன். தேவை ஏற்பட்டால் நிமாயியை தண்டிக்கவும் செய்வேன்'' என்று பதில் சொன்னதும், அந்த மஹாபுருஷர் ப்ரஸன்னமாகி மறைந்துவிட்டாராம். காலையில் மிச்ராஜி வெகுநேரம் இந்தக் கனவைப் பற்றியே நினைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். பிறகு காலம் செல்ல செல்லத்தான் இந்தக் கனவை மறந்தார்.

நிமாயிக்கு வயது ஏற ஏற, அவனது தேஹகாந்தியும் ஏறலாயிற்று. திவ்யமாக ஜ்வலிக்க ஆரம்பித்தான். மிகவும் திடகாத்திரமான திருமேனி உடையவனாக இருந்தான். எல்லா அங்கங்களும் உறுதியானவையாகவும், உருண்டு திரண்டவையாகவும் இருந்தன. நாலு நாலு, ஐந்து ஐந்து சிறுவர்கள் சேர்ந்தும் இவனை சண்டையில் ஜயிக்க முடியாத அளவு சரீர பலம் பொருந்தியவனாக இருந்தான். முகத்தில் எப்பொழுதும் குறும்பு கொப்பளிக்கும். பார்ப்பவருக்கு எல்லாம் ஒரு இனம் புரியாத ஆனந்தமும், நிமாயியுடன் பேசவேண்டும் என்ற ஆவலும் ஏற்படும். தெருவில் நிமாயி எப்பொழுதும் குதித்துக்கொண்டுதான் நடப்பான். கங்கையில் இறங்கும்போதும் ஏறும்போதும் ஒருபடி விட்டு ஒருபடி தாண்டி ஏறி இறங்குவான். வழியில் சிறுவர்கள் விளையாடுவதைக் கண்டால் ஒருவனை இன்னொருவனுடன் இடித்து மோதிவிட்டு இரைச்சலுடன் சிரிப்பான்.

கங்கைக் கரையில் சின்னஞ்சிறு சிறுமிகள் பூஜை ஸாமான்களை எடுத்துக்கொண்டு தேவி பூஜை, கங்காபூஜை செய்வதற்கு செல்வார்கள். உடனே நிமாயி அங்கே ஓடுவான். ''நீங்கள் எனக்கு பூஜை செய்யுங்கள். உங்களுக்கு, நீங்கள் வேண்டும் வரத்தைத் தருவேன்'' என்பான். சின்னப் பெண்கள் தானே! நிமாயியின் ரூபலாவண்யத்தில் மயங்கிக்கொண்டு தன்னிடம் இருக்கும் இனிப்புகளை அவனிடம் தந்துவிடுவார்கள்.

உடனே நிமாயி ஒருத்தியிடம், ''உனக்கு ரூபவானான கணவன் கிடைப்பான்'' என்பான். மற்றொருத்தியிடம், ''உனக்கு பெரிய தனவானுடன் திருமணம் நடக்கும்'' என்பான். வேறொருத்தியுடன், ''உனக்கு ஐந்து குழந்தைகள் பிறக்கும்'' என்பான். ஒருத்திக்கு ஏழெட்டு குழந்தைகளை வரதானம் செய்வான். கன்னிகைகளுக்கு பொய்க்கோபம் ஏற்பட்டு, ''நிமாயி, நீ இப்படியெல்லாம் பேசினால் உனக்கு இனிமேல் இனிப்பே தரமாட்டோம்'' என்று சொல்வார்கள்.

சில பெண்கள் நைவேத்யத்தை ஒளித்துக்கொண்டு சென்றால் நிமாயி, ''ம்! ம்! என்னிடமிருந்து விலகி ஓடுகிறீர்களா? எனக்கு என்ன? உங்களுக்குத்தான் ஒண்ணரைக் கண்ணுள்ள கணவன் கிடைக்கப் போகிறான். ஐந்து சக்களத்திகள் இருக்கப்போகிறார்கள். பெண் குழந்தைகளாகப் பிறக்கப்போகிறார்கள்'' என்று சீண்டுவான். உடனே அவர்கள் வெட்கப்பட்டு சிரித்து திரும்பி வந்து இனிப்புகளை வழங்குவார்கள். சில பெண்களிடம் ''என்னையே பூஜை செய்யுங்கள். நான்தான் ப்ரத்யக்ஷ தெய்வம்'' என்று சொல்லி மாலைகளைப் பிடுங்கி கழுத்தில் அணிந்துகொள்வான். பூஜை செய்யும் பெண்களிடம் சென்று ''ஹரியை பூஜை செய். பிள்ளைக் குழந்தை பிறக்கும்'' என பாடுவான். எல்லோரும் கொல்லென்று சிரிப்பார்கள்.

இந்தப் பெண்கள் கூட்டத்தில்தான் லக்ஷ்மிதேவி என்னும் சிறுமியும் வருவாள். அவள் மிகவும் கள்ளம் கபடமறியாத பெண். நிமாயியிடம் அவளுக்கு ஸ்வபாவமாகவே ஈடுபாடு இருந்தது. பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரங்களின் காரணமாக நிமாயியைக் கண்டதும் வெட்கத்தால் தலைகுனிந்து கொள்வாள். இதயத்தில் அபாரமான ஆனந்த வெள்ளம் பெருகும். நிமாயியும் எல்லாப் பெண்களுடன் லக்ஷ்மிதேவியைப் பார்ப்பான். ஆனால் அவளிடம் மட்டும் ஒன்றும் பேசமாட்டான், கேட்க மாட்டான். லக்ஷ்மிதேவிக்கு, நிமாயிக்கு ஏதாவது நைவேத்யம் ஸமர்ப்பிக்கமாட்டோமா என்று தாபமாக இருக்கும். ஆனால், அவளுக்கு நிமாயி கேட்காமல் எப்படித் தருவது என்று தயக்கமாகவும் இருக்கும். ஏனோ கேட்காமல் தருவதற்கு அவளுக்கு அப்படி ஒரு வெட்கம்.

ஒரு நாள் லக்ஷ்மிதேவி பூஜைக்கு செல்லும்பொழுது நிமாயி அவளைத் தடுத்து, ''நீ என்னையே பூஜை செய்'' என்றான். இதைக் கேட்டதும் அந்தக் கபடமறியாத சிறுமி மிகவும் ஶ்ரத்தையாக சின்னஞ்சிறு மெல்லிய நடுங்கும் விரல்களால் நிமாயிக்கு சந்தனமிட்டு அக்ஷதை போட்டு மாலை இட்டு நைவேத்யம் ஸமர்ப்பித்தாள். பிறகு இரு கைகளையும் கூப்பி நமஸ்காரம் செய்தாள். நிமாயி கம்பீரமாக, ''உனக்கு

தேவனுக்கு துல்யமான ரூபவானும் குணவானுமான பதி கிடைக்கட்டும்'' என்று ஆசீர்வாதம் செய்தான். லக்ஷ்மிதேவி வெட்கத்தினால் தலையை பூமிக்கு அருகில் குனிந்து கொண்டு ஓடிச் சென்றுவிட்டாள். இந்த லக்ஷ்மி தேவிக்குத்தான் நிமாயியின் முதல் தர்மபத்தினியாகும் ஸௌபாக்யம் கிடைத்தது.

நிமாயி அவனை ஒத்த பிள்ளைகளுக்குத் தலைவனாகத் திகழ்ந்தான். இவனை விட விஷமமும் குறும்பும் செய்யும் மற்றொரு சிறுவன் அந்த ஊரிலேயே கிடையாது. சிறுவர்களுக்கும் நிமாயியிடம் கொள்ளைப் பிரியம். அவர்களே மனமுவந்து நிமாயியை சேனாபதியைப் போல நடத்துவார்கள். அவன் என்ன ஜாடையிட்டு சொல்வானோ அதை தப்பு, சரி என்று பார்க்காமல் செய்துவிடுவார்கள். நிமாயியிடம் சிறுவயதிலேயே பெரிய மோஹினி வித்யைதான் இருந்தது. ஏனென்றால் ஒரு முறை அவனுடன் பழகினவர்கள் எப்பொழுதும் அவனடிமையாகி விடுவார்கள்.

தோழர்களைக் கூட்டிக்கொண்டு கங்கைக்குச் சென்றால் அங்கே அவர்கள் செய்யும் கலாட்டாவிற்கு அளவே கிடையாது. மண்ணால் உருண்டைகள் செய்து ஒருவர் மீது ஒருவர் அடித்துக்கொண்டு விளையாடுவார்கள். பத்துப் பதினைந்துபேர் பெரியவர்கள் உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தால் நிமாயியும் தோழர்களும் மெதுவாக அங்கு சென்று ஒருவர் வஸ்த்ரத்தை மற்றவர் வஸ்த்ரத்துடன் இணைத்து முடி போடுவார்கள். அவர்கள் ஸ்னானத்துக்கு எழுந்துகொள்ளும் ஸமயத்தில் வஸ்த்ரத்தை இழுக்கும் பொழுது அது கிழியும். அதைப் பார்த்து எல்லோரும் கைகொட்டிச் சிரிப்பார்கள். பெரியவர்களுக்கு சிரிப்பும் வெட்கமுமாக ஆகிவிடும். சில ஸமயம் அவர்கள் வஸ்த்ரங்களை எடுத்து நிமாயியும் தோழர்களும் கங்கையில் மூழ்க விட்டுவிடுவார்கள்.

மணிக்கணக்கில் கங்கையில் தோழர்களுடன் தண்ணீரை அடித்துக் கொண்டு விளையாடுவார்கள். ஒருவனை ஆமை மாதிரி ஆக்கி நிமாயி அவன் மேல் ஏறி தண்ணீரில் செல்வான். வஸ்த்ரத்தை காற்றால் நிரப்பி தண்ணீரில் பலூனாக்கி விளையாடுவான். பெண்கள் துறைக்கு சென்று ஸ்னானம் செய்யும் பெண்களின் காலைப் பிடித்து இழுப்பான். அவர்கள், ''குய்யோ முறையோ'' என்று கத்தும்பொழுது சிரித்துக்கொண்டே நீருக்கு மேல் வந்து, ''நான் எப்படி ஆமையாக வந்தேன் பார்த்தீர்களா? என்பான். பெண்கள் கோபித்துக் கொண்டு, ''வீட்டுக்கு வா, உன் பெற்றோர்களிடம் சொல்லி என்ன பாடுபடுத்துகிறோம் பார்'' என்று அதட்டுவார்கள். அவர்கள், ''ஏன்தான் நிமாயி இப்படி படுத்துகிறானோ

தெரியவில்லை. ஆனால் அவன் என்னதான் படுத்தினாலும் நமக்கு அவனிடம் ப்ரேமைதான் வருகிறதடீ'' என்று பேசிக்கொள்வார்கள். ஆண்களும் நிமாயியின் உபத்ரவம் தாங்காமல் மிச்ராஜியிடம் சென்று முறையிடுவார்கள்.

ஒருநாள் பண்டிதர்கள் சிலர் மிச்ராவிடம் சென்று, ''உன் மகன் கங்கைக் கரையில் செய்யும் உபத்ரவத்தை நேரில் சென்று பாருங்கள்'' என்று புகார் செய்துவிட்டுச் சென்றனர். இந்த விஷயம் நிமாயிக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவன் வேறு மார்க்கமாக வீடு வந்துசேர்ந்து, ''அம்மா நான் எண்ணை தேய்த்து கங்கா ஸ்னானம் செய்யப்போகிறேன். எனக்கு எண்ணை தா'' என்றான். அன்னை, ''நீ இன்னுமா ஸ்னானம் செய்யவில்லை'' என்று கேட்டாள். ''நான் எங்கே ஸ்னானம் செய்தேன். நீ சீக்கிரம் எண்ணை, வேஷ்டி எல்லாம் தா'' என கேட்டு வாங்கிக்கொண்டு நிதானமாக கங்கையை நோக்கி நடந்தான்.

மிச்ராஜி அங்கே கங்கைக்குச் சென்று சிறுவர்களிடம், 'நிமாயி எங்கே? என்று கேட்டார். சிறுவர்களுக்கு இந்த விஷயத்தில் ஏற்கனவே நல்ல கல்விஅறிவு இருந்தது. உடனே அவர்கள், ''நிமாயி இன்று இங்கு வரவே இல்லை'' என்று ஒரே குரலாகச் சொன்னதும் மிச்ராஜி வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார். வழியில் வேஷ்டியை இடுக்கிக்கொண்டு பரமஸாதுவாக வரும் நிமாயியைப் பார்த்து, ''ஏனடா இப்படி பாடாகப் படுத்துகிறாய். எல்லோரும் உன்னைப் பற்றி புகார் சொல்வதைக் கேட்க அவமானமாக இருக்கிறதே'' என்றார். உடனே நிமாயி உரக்க, ''நான் என்ன செய்யட்டும். ஏன் தான் எல்லோரும் என் பின் இப்படி அலைகிறார்களோ தெரியவில்லை. அம்மா என்னவென்றால் பெண்கள் எல்லோரும் என்னைப் பற்றி புகார் சொல்கிறார்கள் என்று சொன்னாள். நான் படித்துவிட்டு இப்போதுதான் ஸ்னானம் செய்ய வருகிறேன். இப்படி இவர்கள் என்னைப் பத்தி பொய் புகார்கள் சொன்னால் இனிமேல் நான் அதை சத்தியமாக்கிவிட வேண்டியதுதான் என்று இருக்கிறேன்'' என்றான்.

மிச்ராஜியும் சிரித்துக்கொண்டே கங்கையை நோக்கி நிமாயியுடன் ஸ்னானத்திற்குச் சென்றார். இத்தனை அமர்க்களமும் நடக்கும் ஸமயத்தில் நிமாயிக்கு வயது என்ன தெரியுமா? ஐந்து வயதுதான். நிமாயியின் ஸஞ்சல குணங்களால் பெற்றோருக்கு பேரானந்தம் கிடைத்தது. விச்வரூபனுக்கு 16 வயது நிரம்பிவிட்டது. மிச்ராஜி அவனை ஒரு நண்பனைப் போல் **பா**விக்கலானார்.

விச்வரூபன் அத்வைதாசார்யரின் பாடசாலையில் அத்யயனம் செய்துவந்தார். ஒரு நாள் சசீமாதா, ''நிமாயி! உன் அண்ணன் இன்னும்

போஜனத்துக்கு வரவில்லை. நீ போய் பாடசாலைக்குச் சென்று அவனைக் கூட்டிக் கொண்டு வருகிறாயா?'' என்று சொன்னதுதான் தாமதம். நிமாயி நிர்வாணமாகவே கையில் துணியுடன் பாடசாலையை நோக்கி ஓட ஆரம்பித்தார்.

பாடசாலைக்குச் செல்லும் வழியில் துணியைச் சுற்றிக்கொண்டார். அங்கு சென்று விச்வரூபனை அடைந்து, ''அண்ணா கிளம்பு, அம்மா கூப்பிடுகிறாள். போஜனம் தயாராக இருக்கிறது வா'' என்றான். விச்வரூபன் நிமாயியை மடிமேல் அமர்த்திக்கொண்டு தனது ஆசார்யனைக் காண்பித்து, ''ஆசார்யனுக்கு ப்ரணாமம் செய் நிமாயி'' என்றதும், நிமாயி வெட்கத்துடன் சிரித்துக்கொண்டே விச்வரூபனின் தோளில் முகத்தை மறைத்துக்கொண்டார். விச்வரூபன் ஆசார்யனின் அனுமதி பெற்று வீடு செல்ல யத்தனித்தார். நிமாயியும் அண்ணனின் வஸ்த்திரத்தைப் பிடித்துக்கொண்டு அவன் பின்னால் நின்றான். அத்வைதாசார்யார் அப்பொழுதுதான் நிமாயியை நன்றாகப் பார்த்தார்.

நிமாயியின் ஶரீர காந்தியும் சூரியனைப் போன்ற தேஜஸையும் கண்டதும் அவர் ஶரீரத்தில் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. அவரது உபாஸனாமூர்த்தியான பவபயஹாரியான ஜனார்த்தன ஸ்வாமி பாலகன் ரூபத்தில் எதிரே நிற்பது போன்று உணர்ந்தார். மனதிற்குள்ளேயே நிமாயியின் பாத பத்மத்திற்கு நமஸ்காரம் செய்து கொண்டு ''விச்வரூபா, இவன் உன் தம்பி தானே'' என்றார். விச்வரூபனோ ஆமென்று சொல்லி, ''இவன் மிகவும் ஸஞ்சலமானவன். உங்கள் எதிரில் இப்படி ஒன்றும் தெரியாதவன் போல் ஸாதுவாக இருக்கிறான். இவனை கங்கைக்கரையில் சென்று பாருங்கள். அப்போது தெரியும் இவன் யாரென்று. உலகையே புரட்டி விடுவான்'' என்றான். ஆசார்யர் இதைக் கேட்டுச் சிரித்தார்.

தமையனின் வஸ்த்திரத்தைப் பிடித்துக்கொண்டு நடக்கும் நிமாயி நாலு ஐந்து முறை திரும்பி திரும்பி அத்வைதாசார்யரைப் பார்த்தார். அவரும் அவனைப் பார்த்துக்கொண்டு இருந்தார். ஆசார்யருக்கு தன் நினைவே இல்லாமல் போய்விட்டது. தனக்கு ஏன் இப்படி ஏற்படுகிறது என்று அவருக்கு புரியவில்லை. இந்த அத்வைதாசார்யர் தான் பிறகு கௌராங்கரின் முக்ய பார்ஷதராக ஆனார். அவரால்தான் கௌராங்கர் அவதாரபுருஷர் என உலகிற்கு தெரிவிக்கப்பட்டது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# ஜ்யோதிஷம் - 5

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

சென்ற இதழில் ஸகுனாருடத்தைப் பற்றி பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு ஜோதிடர் ஏதோ ஒரு பிரச்சனைக்காக தன்னைக் கலந்து (ஆலோசிப்பவர்கள்) வரும் ஸமயத்தில் தனக்குக் கிடைக்கும் (அத்தருணத்தில் கிடைக்கும்) சில ஸகுனங்களை வைத்து பலாபலன்களைக் கூறுவர். நம்மில் பலருங்கூட இன்று வரையில், 'கழுதை கத்துவது' நல்ல ஸகுனம் என்றும், ''கழுதையைப் பார்ப்பது'' கெட்ட ஸகுனம் என்றும், கூறி வருகின்றோம். அதுபோலவே 'கருட பக்ஷியைப் பார்ப்பது' நல்ல ஸகுனம் என்றும் ''கருடபக்ஷி கத்துவதைக் கேட்பது'' கெட்ட ஸகுனமென்றும் கூறிவருகின்றோம். ஆனால், 'ஆந்தையைப் பார்க்கவும் கூடாது. ஆந்தை கத்துவதைக் கேட்கவும்கூடாது'' என்று கூறுவார்கள்.

இன்று வரையிலும் கூட பூனை குறுக்கே சென்றால் பலர் மேற்கொண்டு பயணத்தைத் தொடர்வதில்லை. அதுபோலவே ஆண்களுக்கு வலது கண் துடித்தலும். பெண்களுக்கு இடது கண் துடித்தலும் நல்ல நிமித்தங்களென்றும், மாறாகத் துடித்தால் துர்நிமித்தங்களென்றும் கூறுவார்கள். தேவாலயம், மகான்கள், தெய்வம் இவைகளை ஸ்வப்னத்தில் தரிசித்தல் நல்ல நிமித்தமாகும். ஸ்வப்னத்தில், ஸவம், வாசனை இல்லாத பூக்களைப் பார்ப்பது, எண்ணெய் தேய்த்து குளிப்பது, தலை இல்லாத முண்டத்தைப் பார்ப்பது போன்றவை துர்நிமித்தங்களாகும்.

ஸ்வப்னத்தில் ஒரு யானையைப் பார்ப்பது, ஸமீபத்தில் ஒரு மஹாத்மாவின் தரிசனம் கிடைக்கப் போகிறது என்பதற்கு ஒரு ஸூசகமாகும். (ஸகுனங்களே) தெய்வாம்சம் உள்ளவர்களுக்கும், குருவின் அனுக்ரஹம் உள்ளவர்களுக்கும் வாழ்க்கையில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகள் முன்கூட்டியே ஸ்வப்னத்தில் தெரிவதுண்டு. தெய்வமும், குருவும் ஸ்வப்னத்தில் த1ரிசனம் கொடுப்பதும், ஸம்பாஷிப்பதும் கூட உண்டு.

ஸ்வப்னங்கள், நிமித்தங்கள், ஸகுனங்கள் இவைகளினால் நன்மையோ, தீமையோ விளைவதில்லை. நமக்கு வாழ்க்கையில் நடக்கவிருக்கும் நன்மை தீமைகளை அவை முன்கூட்டியே காண்பிக்கின்றன. அவ்வளவே! மஹாபாரதத்தில், ராஜஸூய யாகம் முடித்தவுடன் தர்மபுத்ராதிகளுடன் பகவான் க்ருஷ்ணர் பேசிக்கொண்டிருக்கையில்

வானத்தில் சில துர்நிமித்தங்களைக் காண்கின்றனர். அப்பொழுது தர்மபுத்ரர் ஸ்ரீ க்ருஷ்ணரைப் பார்த்து, ''இவ்வளவு நல்ல யாகத்தை முடித்திருக்கிறோம். ஆனால் இப்படி துர்நிமித்தங்கள் ஏற்படுகின்றனவே. இவை எதை ஸூசிக்கின்றன?'' என்று கேட்டார்.

அதற்கு பகவான் க்ருஷ்ணர், ''யுத்தம் ஸமீபத்தில் இருப்பதையே இவை ஸூசிக்கின்றன'' என்று கூறினார். உடனே தர்மபுத்ரர், 'யாரால் அந்த யுத்தம் தோன்றப்போகிறது?' என்று கேட்டார். பகவான் க்ருஷ்ணனோ, ''தங்களின் பொருட்டே அந்த யுத்தம் தோன்றப்போகிறது'' என்று கூறினார். உடனே தர்மபுத்ரர். ''பிறர் என்னிடம் ஏதாவது பேசினால், நான் மறுத்துப் பேசினால்தானே யுத்தம் வரும். இனிமேல், யார் என்னிடம் என்ன பேசினாலும் நான் மறுக்கப் போவதில்லை. அப்பொழுது எப்படி யுத்தம் வரும்?'' என்று ஒரு ப்ரதிக்ஞை செய்தார்.

பிற்காலத்தில், துரியோதனாதிகள் ஸகுனி மூலமாக தர்மபுத்ரரை சூதாட்டத்திற்கு அழைக்கும்பொழுது அவர் செய்துகொண்ட ப்ரதிக்ஞையால் மறுக்க முடியவில்லை. ராஜ்யத்தை பணயமாக வைக்க அவர்கள் கூறும்போது, மறுக்கமுடியவில்லை. த்ரௌபதியைப் பணயமாக வைக்க அவர்கள் கூறும்போது, மறுக்கமுடியவில்லை. அதுவே யுத்தத்திற்கு காரணமாகியது. இதன்மூலம் ஸகுனங்களும், நிமித்தங்களும் வரும் ஸம்பவங்களை காண்பிக்கின்றனவே தவிர, அவைகளால் அந்த ஸம்பவங்கள் நிகழ்வதில்லை என்பதை அறிகிறோம்.

(தொடரும்)

---

மனதையும், புத்தியையும் அலட்டிக் கொள்வது சிறிது காலம் இருக்கலாம். ஆனால் அதன் பின் தெய்வீகப் பேரானந்தம் என்னும் வெண்ணை திரள்வதற்காக இக்கடைதலை நிறுத்தியாக வேண்டும். மனத்தின் மாசுக்கள் அகன்றபின் தூய தெய்வீக எண்ணங்கள் எழுகின்றன. இந்த நிலையையும் கடந்த பின்தான் உட்புற சாந்தியின் முடிவற்ற அமைதி அனுபவிக்கப்படுகிறது. துள்ளும் அலைகளைக் கொண்ட நதி சமுத்திரத்தின் நீரில் அமைதியாகக் கலப்பதுதான் இந்நிலை. இதுதான் எல்லாவித ஸாதனைகளின் வடிவம்.

- பப்பா ராமதாஸ்

# மஹாபாரத கதைகள்

**பதிவ்ரதா மாஹாத்ம்ய பர்வம்** (தொடர்ச்சி)

அரண்மனையில் ஸத்யவானும், ஸாவித்ரியும் நுழைந்தபொழுது அங்கிருந்த அனைவரும் பெருமகிழ்ச்சி உற்றனர். அங்கு இருந்த ப்ராஹ்மணர்களனைவரும், ''த்யுமத்ஸேன மஹாராஜ! நீ இன்று கண்களை அடைந்தாய், இழந்த புத்திரனையும் அடைந்தாய். தெய்வாதீனமாய் நீ விருத்தி ஆகிறாய். நாங்கள் சொன்னது மெய்யானது. மேலும் மேலும் உனக்கு செல்வப்பெருக்கு உண்டாகும். நாங்கள் சொல்வது அப்படியே நடக்கும்'' என்று ஸந்தோஷத்துடன் ஆசீர்வதித்தனர்.

பிறகு, அனைவரும் ஸத்யவானைப் பார்த்து, காட்டிலிருந்து திரும்பி வர மிகவும் தாமதம் ஆனதற்கு காரணம் என்ன என்று வினவினார்கள். மேலும் தாங்கள் எவ்வளவு தாபப்பட்டிருந்ததையும் தெரிவித்தனர். ஸத்யவான், ''நான் காட்டில் கட்டைகளைப் பிளக்கையில் பெரும் தலைவலி வந்து, அயர்வால் உறங்கிப் போனேன். அவ்வளவு நேரம் இதுவரை நான் உறங்கியதில்லை. விழித்தவுடன், நடுநிசியானாலும் நீங்கள் வருத்தப்படுவீர்களே என்று விரைந்து வந்தேன். வேறு விஷயமில்லை'' என்றான்.

கௌதமர், ''ஸத்யவானே! உனது பிதாவுக்கு கண் கிடைத்திருக்கிறது. உனக்கு இதன் காரணம் தெரியாது. ஸாவித்ரிக்கு இது குறித்து தெரியும் என்று நினைக்கிறேன். ஸாவித்ரி! நீ தேஜஸினால் ஸாவித்ரி தேவியைப் போலல்லவா இருக்கிறாய். உண்மையைச் சொல் ரஹஸ்யம் ஏதும் இல்லாவிடில் சொல்'' என்றார்.

ஸாவித்ரி, ''நீர் மஹரிஷியல்லவா? உமது எண்ணம் தவறாதே. மஹாத்மாவான நாரதரால் எனது பர்த்தாவின் மரணமென்று சொல்லப்பட்ட நாள் இன்றுதான். ஆதலால் இவரை விட்டு பிரியாமல் இவரோடு நான் சென்றேன். உறங்கிய இவரருகில் யமதர்மராஜா கிங்கரர்களோடு வந்தார். அவர் இவரைப் பாசத்தால் கட்டி, பித்ருக்களாலடையப்பட்ட திசையில் அழைத்துச் சென்றார். யமதர்மராஜரை நான் ஸத்யமான வசனங்களால் துதி செய்தேன். அவர் ஒன்றன் பின் ஒன்றாக ஐந்து வரங்கள் கொடுத்தார். என் மாமனாருக்கு

இரண்டு கண்களும், அவருக்கு தர்மராஜ்யமும், என் பிதாவுக்கு நூறு புத்திரர்களுண்டாவதும், எனக்கு நூறு புத்திரர்கள் உண்டாவதும், என் கணவருக்கு நானூறு வருஷ ஆயுளும் கொடுத்தார். பர்த்தாவின் உயிரை மீட்க நான் விரதமிருந்தேன். எனது பெரிய துக்கம் முடிவில் ஸுகமாய் முடிந்தது'' என்றாள். ஒன்று சேர்ந்திருந்த ரிஷிகள், ஸாவித்ரியின் வசனத்தைக் கேட்டு புகழ்ந்தும், வாழ்த்தியும் அனைவரையும் ஆசீர்வதித்து விடைபெற்றுச் சென்றனர். இதைக் கேட்ட த்யுமத்ஸேனன் மிகுந்த களிப்படைந்தான்.

மறுநாள் காலை, சால்வ தேசத்திலிருந்து ஜனங்கள் த்யுமத்ஸேனனை பார்க்கக் கூடினர். அவனுடைய பகைவனை, மந்திரி கொன்றுவிட்டான் என்றும், பகைவனின் ஸகாயர்களும் கொல்லப்பட்டார்கள் என்றும் தெரிவித்தனர். மேலும், அனைவரும், ''கண்ணுள்ளவரோ, குருடரோ த்யுமத்ஸேனரே எங்களுக்கு அரசராக இருக்கவேண்டும் என்று எண்ணமிருக்கிறது. இந்த நிச்சயத்துடன் இங்கு வந்தோம். ஸகலமும் சித்தமாயிருக்கிறது. வேந்தே! உமக்கு மங்களம். எங்களுடன் புறப்படுவீராக. உமது ராஜ்ய பதவியை அடைந்து சிம்மாஸனத்தில் வீற்றிருப்பதை நாங்கள் பார்க்கவேண்டும். நால்வகை சேனைகளும் காத்து இருக்கின்றன'' என்றனர். குணவானும், கண்களை அடைந்தவனும், தவசியும், தங்களுக்கு அரசனுமான த்யுமத்ஸேனனை அவர்கள் வணங்கினார்கள்.

த்யுமத்ஸேனன் அனைவரிடமும் விடைபெற்று, கௌரவிக்கப் பெற்று பல்லக்கில் ராஜ்யத்திற்கு சென்றான். அவனுக்கு பட்டாபிஷேகமும், ஸத்யவானுக்கு இளவரசனாக அபஷேகமும் நடைபெற்றது. ஸத்யவானுக்கும், ஸாவித்ரிக்கும் புகழை வளர்க்கின்ற நூறு புத்திரர்கள் உண்டானார்கள். அப்படியே ஸாவித்ரியின் தந்தையான அஸ்வபதிக்கு அவன் மனைவி மாளவியிடத்தில் ஸாவித்ரியின் தம்பிமார்கள் நூற்றுவர் பிறந்தனர்.

இந்த சரித்திரத்தை மார்க்கண்டேயர் வனவாஸத்திலிருக்கும் பாண்டவர்களுக்குச் சொல்லி, ''ஸாவித்ரியால் அவளுடைய குலத்தின் கஷ்டமே தீர்ந்தது. அதுபோல் இந்த திரௌபதியால் நீங்களனைவரும் துன்பம் தீருவீர்கள். எந்த மனிதன் உத்தமமான இந்த ஸாவித்ரியின் உபாக்யானத்தை பக்தியுடன் கேட்பானோ, அவன் ஸுகமுடையவனும், விரும்பின எல்லாம் கைகூடியவனுமாகி துக்கத்தை அடையமாட்டான்'' என்று கூறி ஆசீர்வதித்தார். ■



# பாலகர்களுக்கு ஒரு கதை - 30

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

கேரள தேசத்தில் காலடி என்ற கிராமத்தில் சிவகுரு, ஆர்யாம்பாள் என்ற தம்பதிகள் தர்மத்தின் வழிநின்று இல்லறம் நடத்தி வந்தார்கள். அவர்களுக்கு வெகுகாலமாக புத்ரபாக்யம் இல்லை. காலடிக்கு மிக ஸமீபத்தில் உள்ள மிகப் பெரிய சிவக்ஷேத்ரம் திருச்சூர். அங்கு கோயில் கொண்டுள்ள சிவபெருமானுக்கு வடக்குநாதஸ்வாமி என்று பெயர். வடக்குநாதஸ்வாமிக்கு நெய் அபிஷேகம் செய்வித்தால் புத்ரபாக்யம் இல்லாதவர்களுக்கும் புத்ர பாக்கியம் ஏற்படும் என்பதை அறிந்து, இந்த தம்பதிகளும் திருச்சூர் சென்று வடக்குநாதஸ்வாமியை பூஜை செய்து, நெய் அபிஷேகம் செய்து புத்ர பாக்யம் வேண்டி பிரார்த்தித்தனர்.

அன்று இரவு அவர்கள் அவ்வூரிலேயே தங்க, அவர்களுக்கு ஒரு திவ்ய ஸ்வப்னம் ஏற்பட்டது. அதில் கைலாஸபதியான பரமேஶ்வரன் ப்ரத்யக்ஷமாகி அவர்களுக்கு அனுக்ரஹம் செய்து, தானே அவர்களுக்கு புத்திரனாக அவதரிக்கப்போவதாக தெரிவித்தார். அதை அறிந்த அத்தம்பதிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அது போலவே, ஆர்யாம்பாள் கருத்தரித்து சுக்லபக்ஷ பஞ்சமி திதியில், திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு சங்கரன் என்று பெயரிட்டு மிகவும் பாசத்துடன் வளர்த்து வந்தனர். இவர்தான் நம்முடைய அத்வைத ஸம்ப்ரதாயத்தையே ஸ்தாபித்த ஆதிசங்கர பகவத்பாதர் ஆவார்.

குழந்தைக்கு காலாகாலத்தில் ப்ரஹ்மோபதேசம் செய்வித்து, வேத அத்யயனம் செய்வித்தனர். சங்கரர் தினமும் தாயாருடன் காலையில் பூர்ணா நதியில் ஸ்நானம் செய்து அதன் ஸமீபத்தில் உள்ள க்ருஷ்ணாலயத்திற்குச் சென்று தானே அந்த க்ருஷ்ணனை பூஜை செய்து மிகவும் ஸந்தோஷப்பட்டார். ஒரு நாள், அவருடைய தாயாருக்கு உடல்நலம் சரியில்லாததாலும், தள்ளாமையாலும் பூர்ணா நதிக்குச் சென்று ஸ்நானம் செய்ய முடியவில்லை. அதனால் தாயார் மிகுந்த தாபம் அடைந்தாள். அதை அறிந்த சங்கரர் பூர்ணாநதியையே தன்னுடைய வீட்டின் ஸமீபத்தில் வரவழைத்து தாயாரை அதில் ஸ்நானம் செய்யச் சொல்லி மிகவும் ஸந்தோஷப்பட்டார்.

ஒரு ஸமயம் குழந்தை சங்கரர் அக்ரஹாரத்தில் பிக்ஷை வாங்குவதற்காக சென்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ''பவதி பிக்ஷாந்தேஹி'' என்று கேட்டுக்கொண்டே சென்றார். அப்படி செல்கையில், அங்கு அப்படி அவர் கேட்ட ஒரு கிரஹத்துள் மாதரசி வீட்டு வாசலில் பிக்ஷைக்காக வந்திருக்கும் குழந்தையைப் பார்த்தார். தேஜஸ், வர்ச்சஸ், ஓஜஸ் இவைகளினால் ஜ்வலிக்கும் குழந்தையைப் பார்த்தார். வீட்டிற்குள் சென்றார். தன்னுடைய ஏழ்மை நிலையை நொந்து கொண்டாள். அவளுடைய வீட்டில் அவளுக்கு பிக்ஷை இடுவதற்கு ஒன்றும் இல்லை. தவித்தாள். தன்னுடைய துர்பாக்கியத்தை நினைத்துக் கொண்டாள். அவளுடைய தவிப்பைப் பார்த்த சங்கரர் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. கொண்டு வந்து பிக்ஷை இடலாம் என்று கூறினார்.

அன்று துவாதசி, தன்னுடைய பாரணத்திற்காக வைத்திருந்த நெல்லிக்காயை கூனிக்குறுகி கொண்டு வந்து பிக்ஷை பாத்திரத்துக்குள் அவள் போட்டாள். அவளுடைய ஹிருதயத்தை அறிந்த குழந்தை சங்கரரின் ஹிருதயத்தில் கருணை பொங்க மஹாலக்ஷ்மியை பார்த்து ஸ்துதி செய்தார். அத்தருணமே அந்த க்ரஹத்தின் முற்றத்தில் தங்க நெல்லிக்காய்களாகக் கொட்டியது. அப்பொழுது சங்கரர் செய்த ஸ்தோத்திரமே ப்ரஸித்தியான கனகதாரா ஸ்தோத்திரமாகும். ■

---

மனத்தினின்றும் அதன் குரங்குச் சேட்டைகளினாலும் ஒதுங்கி நிற்கும் உணர்வை வளர்த்துக் கொள். உன்னுள் உள்ள தெய்வீக சக்தியை இடைவிடாது நினைவில் வைத்துக் கொள்வதன் மூலம்தான் இது ஸாத்தியமாகும். ஆன்மீக முன்னேற்றத்திற்கு சோர்வும் நம்பிக்கையை இழப்பதும் எதிரிகளாகும். எக்காரணத்தைக் கொண்டும் மனதைத் தளர விடாதே. மந்திரத்தை ஜபித்துக்கொண்டு சந்தோஷமாக இரு. உன்னுடைய வாழ்க்கை தானாகவே இயற்கையான வழியில் செல்லவேண்டும். உன்னுடைய இயல்பு குழந்தை இயல்பாக வேண்டும்.

- பப்பா ராமதாஸ்

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 59

### செப்படி வித்தை கற்றிப்படி மயக்கம் விட்டு உருப்படும் வித்தை காட்டு அருணாசலா

செப்படி வித்தை காண்பிப்பவன் மந்திரவாதி. இந்திரஜாலம் போன்று வித்தை காண்பிப்பவன். கையில் ஒரு புஷ்பத்தை எல்லோருக்கும் முன் காண்பிப்பான். திடீரென்று, அந்த புஷ்பம் ஒரு பழமாக மாறிவிடும். அந்த வித்தையை பார்ப்பவருக்குதான் அப்படி தோன்றும். அந்த மந்திரவாதிக்கு அது ஒரு புஷ்பம் மாதிரிதான் தோன்றும். வித்தையில் அவன் மயங்குவதில்லை. ஏனையோர் மயங்குகின்றனர்.

அதுபோல் பகவானும் ஒரு மாயாவி. அவன் இவ்வளவு பெரிய ப்ரபஞ்சத்தையும், அதில் அநேகவிதமான விஷயங்களையும் படைத்து வைத்துள்ளான். ஆனால், அதைக் கண்டு அவன் மயங்குவதில்லை. நாமோ இந்த உலகத்தைப் பார்த்து மயங்குகிறோம். இது மாயை, இது நிலையானது அல்ல என்று தெரிந்தே மயங்குகிறோம். தர்மபுத்திரர் மஹாபாரதத்தில், ''நேற்று இருந்தவன் இன்று இருப்பதில்லை. உலகம் இவ்வளவு அநித்யமானது. இவ்வளவு நேரில் ஒவ்வொருவரின் மரணத்தையும் பார்த்தும் கூட, ஒருவரும் தனக்கும் ஒரு நாள் மரணம் வரும் என்று எண்ணுவதில்லை'' - என்கிறார். ஒருவர் மரணமடைந்து விட்டார் என்று வருத்தப்படுவது அனுதாபத்துடன் முடிந்துவிடுகிறது. மரணம் வந்து விடப்போகிறதே என்று நினைத்து யாரும் அம்ருதத்வத்தை அடைய பாடுபடுவதில்லை. உலகமே ஶாஸ்வதம் என்று எண்ணி வாழ்கிறோம். ஆதலால் பகவானும் மாயாவி.

பட்டினத்தார் சொல்கிறார், ''ஒரு மனைவியும், கணவனும் சேர்ந்து ஒரு சின்ன குழந்தை பிறக்கிறது. அந்த குழந்தை வளர்ந்தவுடன், கல்விக்கு பாடசாலை அனுப்புகின்றனர். வேளாவேளைக்கு அதற்கு அன்னம் ஊட்டி, படிக்க வைத்து, கல்யாணம் செய்து வைக்கின்றனர். இந்த பெற்றோரோ காலம் முழுவதும் அந்த குழந்தைக்காகவே என்று உழைத்திருக்கின்றனர். அந்தக் குழந்தை, பெற்றோர்களின் பாசத்தை

உதறிவிட்டாலும், பெற்றோர்களால் அந்த குழந்தையை விட முடிவதில்லை. அப்பொழுதும் கூட அவர்கள் அக்குழந்தையைப் பற்றியே கவலையுறுகின்றனர். பெற்றோர்களின் வாழ்க்கையில், அவர்கள் தங்களுடைய லாபத்துக்காக எதுவும் செய்து கொள்ளவில்லை. வயதான காலத்தில் அவன் உயிர் ஊசலாடும்பொழுது கூட அவனை பாசப்பிணைப்பு விட்டு வைப்பதில்லை. இவர்கள் வாழ்வது எப்படி என்றால், தெரு வீதியில் ஈயம் பற்ற வைத்திருக்கும் துருத்தி சும்மாவாக மூச்சு விட்டுக்கொண்டே இருக்கும். அதுபோலவே, இவர்களும் மூச்சு விட்டுக்கொண்டு இருக்கின்றனர். புருஷார்த்தத்திற்காக இவர்கள் பாடுபடுவதில்லை.

வாந்தி எடுத்ததை மறுபடி சாப்பிடுவது போல்தான் தினமும் காரியங்கள் செய்கிறோம். தினமும் பல் தேய்த்து, குளித்து, சமைத்து, உண்டு, பேசி, உறங்கி என்று காலம் கழிகின்றது. இது பற்றி எல்லாம் தெரியாத ஒருவன் அவ்வாறு வாழ்வது பரவாயில்லை. மோக்ஷத்தைப் பற்றி அறிந்தும், போகும் வழி தெரிந்தும் அவ்வாறு வாழ்பவர்களின் வாழ்க்கை ப்ரயோஜனமற்றது.

இவ்வாறு இந்த உலக மயக்கம் நம்மை விட்டு போகாமல் இருப்பதற்குக் காரணம், பல்வேறு ஜன்மங்களாக, உலகத்தை நோக்கியே நமது மனது ஓடி காரியங்களை செய்து வருகிறோம். அநேக ஜன்மங்களில் ஸம்ஸாரத்திலேயே சுழன்று வந்துள்ளோம். அதனாலேயே இப்பொழுது பணம், காசு நோக்கி மனது ஓடிச் செல்கிறது. நமது சொந்த ஸாமர்த்தியத்தில் இந்த மாயா மயக்கத்திலிருந்து விடுபடுவது ஸாத்தியமில்லை. கடவுளை ஶரணடைந்தவரால் நிச்சயம் மாயையைக் கடக்கமுடியும். தன் கை கட்டப்பட்டிருப்பவன், மற்றொருவர் கை கட்டை அவிழ்த்தல் இயலாது. கட்டுகளில்லாதவன் மட்டுமே அடுத்தவர் கட்டை அவிழ்க்கமுடியும். அருணாசலேஶ்வரனைக் காட்டிலும் இவ்விஷயத்தில் ஸமர்த்தன் யாரும் இல்லை. அவனை ஶரணடைந்தால், மாயையிலிருந்து விடுபடுவோம்.

'உருப்படும் வித்தை' - மாயப்ரபஞ்சமானது விலகினால் பகவானுடைய உருவானது தெளிவாகத் தெரியும். மனது இருக்கும் வரைதான் சுக, துக்கங்களும், மாயையும் இருக்கும்.

ஒரு பதிவ்ரதை இருந்தாள். அவள் கணவன் இறந்துவிட்டான். அவளால் துக்கத்தை தாங்க முடியவில்லை. தானே இறந்துவிடலாமா

என்று நினைக்கிறாள். காரணம், தனது சரீரமழிந்தால் தனது துக்கம் ஒழியும் என்பதே. ஆனால், இதையே விவேகமோடு விசாரிக்கையில் மனது சாந்தி அடையும். மனது அழிந்து விட்டால் உலகின் எந்த துக்கமும் பாதிக்காது.

அந்த காலத்தில் கல்வி இக்காலத்தில் உள்ளதைப் போலில்லை. அக்காலக் கல்வியில் தர்மத்தை போதித்து வந்தனர். இக்காலத்திலிருப்பது அத்யாத்மிகமான கல்வி இல்லை. ஒரு காரியத்தை செய்வதற்கு புத்தி சொல்வதையே ப்ரமாணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. புத்தியை வைத்து செய்யும் காரியங்கள் தவறாகவே முடியும். காரியங்கள் செய்வதற்கு ப்ரமாணம் ஶாஸ்திரமும், மஹாத்மாக்களின் வாக்கும்தான். தர்மத்தை அறிய அத்யாத்மிகமான கல்வி அவசியம். ஏனெனில் தர்மம் மிகவும் சூட்சுமமாக உள்ளது.

ஒரு போக்கிரி, ஊரில் உள்ள அனைவருக்கும் மிகுந்த தொல்லை கொடுத்து வந்தான். அவன் செய்யாத குற்றமில்லை. அவனால் அனைவரும் துன்பத்துக்குள்ளாயினர். அவன் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். அவன் இறந்தால் பலருக்கு நல்லது. அவனுக்கு நல்ல வைத்தியம் செய்து, தேற்றி அனுப்பினால் பலருக்கு மிகுந்த துன்பம். அவனை தேற்றுவது சரியா, அல்லது அவனை இறக்க விடுவது சரியா? இது தர்மசங்கடம். நமது புத்தி பக்ஷபாதத்திற்கும், ராகத்வேஷத்திற்கும் உட்பட்டதாயிருப்பதால், நாம் இவ்வாறு விஷயங்களில் முடிவு எடுக்க இயலாது. இதற்கு ஶாஸ்த்ரமே வழிகாட்டி.

அத்யாத்மிகமான கல்வி போதித்து வந்த குருகுலங்களில் குருக்கள் சீடர்களுக்கு மோக்ஷத்திற்கு செல்லும் வழியையும் போதித்து வந்தனர். அப்பொழுது எந்த சிஷ்யன் மனதில் அதிக ஸஞ்சலம் ஏற்படுமோ, அவனைப் பார்த்து 'உருப்பட மாட்டாய்' என்பர். அதற்கு பகவானுடைய உரு உன் மனதில் வராது என்று அர்த்தம். ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்படாது என்று அர்த்தம். இதைக்கொண்டே நாம் இன்றும் யாரையாவது திட்டும்பொழுது, 'உருப்படமாட்டாய்' என்கிறோம்.

நம்மால் ப்ரபஞ்சத்தை மாயை என்று தெரிந்தும் பாடம் கற்றுக்கொள்ள முடிவதில்லை. இதுவே விவேகமற்ற தன்மை. ஒருவர் நம்மிடம் வந்து 1000 ரூபாய் கடன் கேட்டார். கொடுத்தோம். அவர் திருப்பித் தரவில்லை. திருப்பித் தராமலேயே மறுபடியும் வந்து பணம் கேட்கிறார். நாம் முன் தந்த பணத்தையே இவர் தரவில்லையே என்று எண்ணி, பணம் தர மறுத்து விடுகிறோம். இப்பொழுது நாம் நஷ்டப்பட்டே

பாடம் கற்றுக்கொண்டோம். இதை ஒருவர் பார்த்துக் கொண்டே இருந்தார் நாம் பணம் தர முடியாது என்று சொன்னவுடன், நம்மிடம் கடன் கேட்டவர் அவரிடம் போய் கேட்டார். அவரோ முந்தினவர் தந்த பணத்தையே கடன் வாங்கியவரால் திருப்பி தரமுடியவில்லை. நாம் தந்தால் தரமாட்டார் என்று எண்ணி மறுத்துவிடுகிறார். இப்பொழுது அவர் நஷ்டப்படாமலேயே பாடம் கற்றுக் கொள்கிறார். இது விவேகம். மஹாத்மாக்கள் நஷ்டப்படாமல் பாடம் கற்றுக்கொள்கின்றனர். விரக்தி கதியில் வரும் மனிதர்கள் நஷ்டப்பட்டு பாடம் கற்றுக் கொள்கின்றனர். இதற்கு, மஹாத்மாக்களுக்கு சுபாவமாக விரக்தியும், விவேகமும் இருப்பதே காரணம். நமக்கு கஷ்டம் வரும் முன், பிறர் படும் கஷ்டம் கண்டு, உலகம் என்றால் இவ்வாறுதான் இருக்கும் என்று புரிந்து கொண்டு மோக்ஷத்திற்காக பாடுபட ஆரம்பித்தால் நாம்தான் விவேகி.

(தொடரும்)

# செய்திகள்

### ஜூன் 12-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் இரவு 7 மணி முதல் 9 மணி வரை ஸ்ரீமதி ஸீதா துரைசாமி அவர்களின் ஜலதரங்கம் கச்சேரி நடைபெற்றது.

### ஜூன் - 13-ந்தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் இரவு 7 மணி முதல் 9 மணிவரை Violin Mastereo ஸ்ரீ சந்த்ரஸேகர் அவர்களால் வயலின் கச்சேரி நடைபெற்றது.

### ஜூன் 19-ந் தேதி முதல் ஜூன் 25-ந் தேதி வரை

ஸ்ரீ ஸ்வாமிகள், மும்பை பஜன்ஸமாஜ் (Ghatkopar East) சார்பில் ஸ்ரீ ராமர் கோவிலில் தினமும் இரவு 7.30 மணி முதல் 10.00 மணிவரை 'பக்த விஜயம்' பற்றி ப்ரவசனம் செய்தார்கள்.

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

**சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா**

ப்ரேமிகபவனம், 24, நேதாஜி நகர்,

ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஜ்ஞையின் பேரில் ''சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்த்ரா'' சென்ற விஜயதசமி (செப்டம்பர் 1999) அன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் கிளைகளில் ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் தினமும் நடைபெற்றுகொண்டு வருகின்றது. நமது ஸத்ஸங்க அன்பர்களால் கேந்த்ரா சார்பில் டிசம்பர் 31ந் தேதி அன்று ஆங்கில புத்தாண்டு (2000) ஒட்டி ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் தி.நகர், திருமலை தெரு, பத்மாசேஷாத்ரி பாலபவன் வித்யாலயா பள்ளியில் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக நமது வேண்டுகோள்படி,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥*

நாமஸங்கீர்த்தனம் கீழ்கண்ட பள்ளிகளில் இறைவணக்கத்தில் (School Prayerல்) நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

| SL No. | SCHOOL NAME | PLACE |
|---|---|---|
| 1.a) | Padma Seshadri Bala Bhavan Vidhyalaya | T. Nagar (Main) T.P. Road |
| b) | Padma Seshadri Bala Bhavan Vidhyalaya | K.K. Nagar |
| 2. | Smt. Sarojini Varadhappan Girl's Higher Secondary School | Porur |

| | | |
|---|---|---|
| 3. | Guruji Sri Muralidhara Swamigal Higher Secondary School | Vadapalani |
| 4. | Sri Sitarama Vidhyalaya | West Mambalam |
| 5. | Sri Sankara Vidhyalaya | East Tambaram |
| 6. | Sri Natesan Vidhyalaya | Mudichur |
| 7. | Sri Sankara Vidhyalaya | Chrompet |
| 8. | Sri Sankara Vidhyalaya and its branches | Pammal |
| 9. | Vel's Vidhyalaya | Pallavaram |
| 10. | G R T Mahalakshmi Higher Secondary School | West Mambalam |
| 11. | Balavidhya Higher Secondary School | West Mambalam |
| 12. | Vivekananda Vidhyalaya | Mudichur |
| 13. | Sri Ramakrishnan Higher Secondary School | Chrompet |
| 14. | Hillview Higher Secondary School | Chrompet |
| 15. | Sri. Ahobila Mutt Oriental Higher Secondary School | Mambalam |

ஜனவரி 2000 பொங்கல் அன்று முதல் சென்னை, தி.நகர் ஹரிஜன வீதிகளில் ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக பம்மலிலும் ஹரிஜன வீதிகளில், ''ஹரே ராம'' நாம ஸங்கீர்த்தனம் மே-1ந் தேதி அன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95
**WPP No. TN/MS(S)/54/99**

Regd. No. TN/Chief PMG - 156/2000
Licensed to Post without prepayment WPP No. 52

**வேணு :** 5 | ஜூலை 2000 | **கானம் :** 12

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்
சென்னை - 600 083

மதுரமுரளி வருடசந்தா 2000

மதுரமுரளி, 1995 ஜூலை முதல் ஐந்து ஆண்டுகளாக தங்களை ஆன்மீக பாதையில் உயர்த்தி வருகின்றது. தங்களைப் போன்றே தங்களைச் சேர்ந்த உறவினர்களையும் நண்பர்களையும் ஆன்மீக பாதையில் மதுரமுரளி அழைக்கின்றது.

சந்தாதாரர்கள், தங்களது இந்த ஆண்டு சந்தாவையும் புதியதாக அடி எடுத்து வைப்போர் தங்களது முதலாண்டு சந்தாவையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வருட சந்தா - உள்நாடு - Rs. 60/- வெளிநாடு Rs. 300/

ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள், சந்தா அனுப்பும் பொழுது தங்களின் சந்தா எண்ணையும், முழுமுகவரியையும், Phone No.ம் எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றோம். அப்படி அனுப்பும் M.O.விலோ, D.D. / Cheque உள்ள கவரின் மீதோ ''மதுரமுரளி வருடசந்தா 2000'' என்று எழுதி அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
**திரு. V. சங்கரன்,** மதுரமுரளி,
5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே. நகர், சென்னை - 600 078,
Phone : 4714327

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar